பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 176

வியாழக்கிழமை
22 மே 2025

வைகாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மக்களைப் பிரித்தாள பல்வேறு சதிகள்

கொழும்பு, மே 22
இனரீதியாக மக்களைத் தூண்டி விடுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன. அவற்றுக்கு இடமளிக்கக்கூடாது என்று கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷிடம் கடற் 11

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குக மாற்று ஏற்பாடுகள் ஏதும் தேவையில்லை

யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 22
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்றும், அந்தச் சட்டத்துக்குப் பதிலாகப் புதிய சட்டங்கள் அல்லது மாற்று ஏற்பாடுகள் தேவையில்லை என்றும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. 11

## அநுரவின் ஆட்சியிலும் மக்களுக்கு ஏமாற்றமே

மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 22
கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்காவுக்கு வாக்களித்த தமிழ்மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.
இதுதொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னைய ஆட்சியாளர்களின் அடக்குமுறை,
பாரபட்சம் 11

## முந்திச்செல்ல முற்பட்டதால் பேருந்து – ஹைஏஸ் விபத்து

உமையாள்புரத்தில் சம்பவம்

கிளிநொச்சி, மே 22
கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்றும் ஹைஏஸ் வாகனமும் நேற்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.
கொழும்பில் இருந்து வந்து கொண்டிருந்த அரச பேருந்து,
ஹைஏஸ் 11



வவுனியாவில்

## யானைத் தொல்லைக்கு எதிராக சடலத்துடன் மக்கள் போராட்டம்

வவுனியா, மே 21
வவுனியா கண்ணாடிக்கணேசபுரம் கிராமத்தில் யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தியும், யானை தாக்கி உயிரிழந்தவருக்கு நீதிகோரியும் அந்தப் பகுதி மக்கள் சடலத்துடன் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11

தெற்கில் மட்டுமல்ல

## உயிரிழந்தோரை நினைவேந்துவதற்கு வடக்கு மக்களுக்கும் உரிமையுண்டு!

அமைச்சர் கிரிஷாந்த அபேசேன திட்டவட்டம்

கொழும்பு, மே 22
தெற்கில் மட்டுமல்ல, உயிரிழந்தவர்களை நினைவேந்தும் உரிமை வடக்கு மக்களுக்கும் உள்ளது. தெற்கு இளைஞர்கள் உயிரிழக்கும்போது மட்டுமல்ல, வடக்கு இளைஞர்கள் உயிரிழக்கும்போதும் எமக்குக் கண்ணீர் வந்தது என்று தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார். 11

## கொக்கிளாயில் விபத்து மாணவி பரிதாபச் சாவு!



முல்லைத்தீவு, மே 22
முல்லைத்தீவு கொக்கிளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருநாட்டுகேணிக் பகுதியிலுள்ள பாடசாலைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் மாணவியொருவர் உயிரிழந்துள்ளார். 11

இலஞ்சம் பெறுவதற்கு முற்பட்ட

## பூவரசங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி நேற்றுக் கைது

வவுனியா, மே 22
வவுனியா – பூவரசங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். காணி
விவகாரம் 11



769 வழித்தடத்துக்குரிய

## தனியார் பஸ் சேவையினர் வீதி மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பஸ் சேவையினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பிலும், வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். 11

### முச்சந்தி முரளி

'எல்லாரும்
போராடுகினமே தவிர
தீர்வு சொல்லத்தான்
ஆருமில்லை கண்டியளோ'

தனியாருக்கு வழங்குவதற்காக

## உப்புப் பதுக்கப்பட்டமையே பற்றாக்குறைக்குக் காரணம்!

ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மே 22
நாட்டில் உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு, தனியார் வியாபாரத்துக்காக உப்பு பதுக்கிவைக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம்.
அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் பகுதிகளில் இவ்வாறு உப்புப் பதுக்கப்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டி 11

## காங்கேசன் ரயில் நிலையத்தில் 764, 769 வழித்தடச் சேவைகள்

உறுதிப்படுத்துமாறு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், மே 22
764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பேருந்து சேவைகளை காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிப்பதை உறுதிப்படுத்துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வடமாகாண ஆளுநர் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4078 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 17 38 40 67 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1145 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 54 55 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0104 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 3 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2184 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 07 34 43 59 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5836 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 1 0 7 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1866 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 06 08 19 34 |
| விசேட எழுத்து | B |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 21.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0411 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 7 8 |



# தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் எண்ணமில்லை

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, மே 22**

**தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரைக் குடியேற்ற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. மஹிந்த மற்றும் ரணில் ஆகியோரைப் பார்த்த கோணத்தில் எம்மைப் பார்க்காதீர்கள் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப்பெறல் தொடர்பான பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்தார். அந்தப் பிரேரணை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியன கூட்டாக சமர்ப்பிக்கும் அமைச்சரவைப் பத்திரம் ஊடாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படும். அதனூடாகக் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும். மக்களின் காணிகளைச் சுவீகரிக்கவேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. வடக்கு மாகாணத்தில் தேசியமக்கள் சக்தி அமோகவெற்றியைப் பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்கள் எம்முடன் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் நாங்கள் ஏன் வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்கும்வகையில் செயற்படவேண்டும்?

காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு 9 மாகாணங்களையும் வரையறுத்து இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமாக பிரசுரிக்கப்படவில்லை. காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு காணி அமைச்சு மற்றும் சுற்றாடல்துறை அமைச்சு என்பன ஒன்றிணைந்து கூட்டுப்பத்திரத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க தீர்மானித்துள்ளன. இந்தக் கூட்டுப்பத்திரம் ஊடாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படும். அதனுடாகத் தீர்வுகாணப்படும். தமிழ் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு சிறிதளவேனும் கிடையாது. அவ்வாறு செயற்படவேண்டிய அவசியமும் இல்லை - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 21.05.2025 | புதன்கிழமை | 0544 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| C | 7 9 8 0 4 2 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.05.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2810 | Z | 18 26 76 80 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 03 15 22 33 | 4971 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.05.2025 | புதன்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 25 27 53 61 | 4522 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 21.05.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 06 | 03 15 36 47 | 1986 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 23 32 48 51 | 2636 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 21.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 16 48 51 52 | 2128 |

# இலங்கை வருகின்றார் நியூஸி. பிரதிப்பிரதமர்

கொழும்பு, மே 22

நியூஸிலாந்தின் பிரதிப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸ் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நாளைமறுதினம் சனிக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் நாட்டுக்கு வரவுள்ள அவர், 28ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருப்பார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளதோடு, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்து பரந்துபட்ட இருதரப்புப் பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்கவுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, விவசாயம், கல்வி, விளையாட்டு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாக அவரது இந்தப் பயணத்தில் விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் தனியார்துறைப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார். (எ-இ)

# மின் கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிக்கும் அவசியமில்லை

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு


கொழும்பு, மே 22

மின்சாரக்கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை. மின்சாரக்கட்டணத்தை 9 சதவீதத்தில் பராமரிக்கமுடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இதுதொடர்பாக சர்வதேச நாணயநிதியத்துடன் கலந்துரையாடவேண்டும்.

2009ஆம் ஆண்டு இலங்கை மின்சாரசபைச் சட்டம் மற்றும் 1969ஆம் ஆண்டு இலங்கை மின்சாரசபைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதித் திட்டத்தின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட சூத்திரத்தை அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டும் - என்றார். (எ-இ)




# இலங்கையில் தேனீப் பூங்கா

கொழும்பு, மே 22

இலங்கையின் முதலாவது தேனீப் பூங்கா பிங்கிரியவில் கடந்த 18 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தேன் உற்பத்தியைத் தங்குதடையின்றி மேற்கொள்வதற்கு இந்தத் தேனீப் பூங்கா வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பசுமை சுற்றுலா மையமாகவும் இது விளங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 6)



# 3 அரச கட்டடங்களை புனரமைக்க ஏற்பாடு

கொழும்பு, மே 22

இலங்கையின் மிகவும் முக்கியமான 3 அரச கட்டடங்களுக்கு, திருத்தப்பணிகள் அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டையிலுள்ள நாடாளுமன்ற வளாகம், தற்போதைய ஜனாதிபதி செயலகம் மற்றும் கொழும்பு 7 இல் உள்ள சுதந்திர சதுக்கம் என்பனவே புனரமைக்கப்படவுள்ளன.

கட்டுமான அதிகாரிகள், ஏற்கனவே மதிப்பீடு மற்றும் வடிவமைப்பு அறிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்துள்ளனர், இதன்படி, நாடாளுமன்ற வளாகத்தை மட்டும் புதுப்பிப்பதற்குச் சுமார் 10 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டு களுக்குள், கட்டம் கட்டமாக, மேற்கொள்ளும் வகையில், திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத்தொழிற்சாலை இழுத்து மூடல்; 1,400க்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதி!

கொழும்பு, மே 22

**கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலை திடீரென மூடப்பட்டுள்ளதால், அங்கு பணிபுரிந்த ஆயிரத்து 400க்கும் மேற்பட்டவர்கள் வேலையிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.**

முன்னறிவிப்பு இன்றி இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது என்றும், தற்போது அங்கு பாதுகாப்புப் பணியாளர்கள் மட்டுமே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 1978 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலை பிரிட்டனின் ஒரு முதலீட்டுத் திட்டமாகும். இங்கு உற்பத்திசெய்யப்படும் ஆடைகள் லண்டனுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டன என்று அதன் ஊழியர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் தற்போதைய உற்பத்திச் செலவுகள் நிலையானதாக இல்லாததால் இந்தத் தொழிற்சாலையை மூடத்தீர்மானிக்கப்பட்டது என நிர்வாகத்தால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திடீரென இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால், அங்கு பணியாற்றியவர்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-25,6)






## அசைவ உணவகத்தை மூடுமாறு மனு கையளிப்பு



யாழ்ப்பாணம், மே 22

நல்லூரில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடுமாறு வலியுறுத்தி 450க்கும் மேற்பட்ட கையெழுத்துக்களுடன் கூடிய கோரிக்கைகள் அடங்கிய மனு நேற்றுப் புதன்கிழமை சைவமக்களின் ஏற்பாட்டில் யாழ். மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரனிடம் யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது.

சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் தலைமையில் மனுக் கையளிப்பு இடம்பெற்றது.

மனுவைப் பெற்றுக்கொண்ட யாழ்.மாநகரசபை ஆணையாளர் குறித்த அசைவக உணவகத்தை அகற்றுவது தொடர்பில் யாழ்.மாநகரசபை உறுதியான நிலைப்பாட்டிலுள்ளதாகவும், அனுமதி எதுவும் பெறப்படாது திறக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அசைவக உணவகத்துக்கு எதிராக எமது சுகாதாரப் பிரிவினரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி.யசோதா உதயகுமார், யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜரின் பிரதிகள் நேரடியாகக் கையளிக்கப்பட்டன. (ச-66)

## மருந்துகள் பற்றாக்குறை!

கொழும்பு, மே 22

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள் மற்றும் இன்சுலின் போன்றவற்றுக்கு கடும் பற்றாக்குறை நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. மருந்து விநியோகத்தில் தொடர்ந்து ஏற்படும் இடையூறுகள் நோயாளி பராமரிப்பு மற்றும் மருத்துவமனைச் செயற்பாடுகளுக்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**மரம் சும்மா இருந்தாலும், அப்பிடிச் சும்மா இருக்கக் காற்று விடுறேலை எண்டமாதிரி, பட்சி சும்மா இருந்தாலும்கூட சுத்தியிருக்கிறவை செய்யிற வேலையளால சும்மாயிருக்கமுடியேலை. உந்த வடக்கு மாகாண அரச நிர்வாக உத்தியோகத்தர்மார் சங்கம், தங்கட ஆக்களுக்குப் பதவியைப் பறிச்சு டம்மிப் பதவி குடுத்ததுக்கும், 'தரம்- 2' இல உள்ளவைக்குப் போகவேண்டிய பதவி 'தரம் -3' இல இருக்கிறவருக்குக் குடுபட்டது பிழை எண்டும் ஆளுநருக்குக் கடிதமொண்டு அனுப்பி இருக்குது. தங்கட சங்கத்தைச் சேர்ந்தவைக்கு அந்தச் சங்கம் சப்போர்ட் பண்ணுறது பிழையில்லைத்தான். காகத்துக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சுதானே, அதைமாதிரி அவையள் என்ன பிழைவிட்டாலும் அந்தச் சங்கத்துக்கு அவையின்ர மெம்பர்மார்தானே பாதிக்கப்பட்டிருக்கினம். அதால தங்கட மெம்பர்மாரில பிழை இருந்தாலும்கூட அதை மறைச்சு அவைக்குச் சப்போர்ட் பண்ணுறதுக்கு தனிக்கெத்து வேணும். இப்பிடித் தங்கட மெம்பர்மாருக்காக வரிஞ்சுகட்டிக்கொண்டு களமிறங்கின அந்தச் சங்கத்தைப் பார்த்து 'நாக்கைப் பிடுங்கிறமாதிரி நாலு கேள்வி கேக்கமுடியாதோ?' எண்டு அதே சங்கத்தைச் சேர்ந்த கனபேர் பட்சிக்கு ஒரே கோல் மழை. ஒரு கண்ணில வெண்ணெயும், இன்னொரு கண்ணில சுண்ணாம்பும் வைச்சுக் கொண்டு சங்கம் நடந்தால் அவைக்குக் கோபம் வரத்தானே செய்யும். சங்கக்காரரைப் பார்த்து நாக்கைப்பிடுங்கிறமாதிரி அவைக்கும் நாலு கேள்வி கேக்கோணும் போல இருந்தாலும், சில பல காரணங்களால அது முடியாது. ஆனால் பட்சிக்கு அந்தக் கட்டுப்பாடு ஒண்டும் இல்லையெண்டாதால, அவை கேக்க நினைச்ச கேள்வியளை இஞ்ச கொஞ்சம் பாப்பம்.**

**கேள்வி 1: 'தரம்- 2' க்குரிய ஆக்களுக்குக் குடுக்க வேண்டிய பதவியை 'தரம்- 3' இல இருக்கிற ஒருத்தருக்குக் குடுத்திட்டினம் எண்டு உந்தச் சங்கம் சட்டப்படி நியாயம் கேட்டிருக்கு அதில பிழையில்லை. ஆனால் யாழ்ப்பாணக் கச்சேரிப் பெரியவரா வாறதுக்கு இருக்கவேண்டிய பதவிநிலை இல்லாத ஒருத்தரை இந்தமுறை போடேக்க உந்தச் சங்கம் ஒண்டுமே சொல்லாமல் ஏன் வாயை ஆமைப் பூட்டால பூட்டிவைச்சது?**

**கேள்வி 2: இப்பிடிப் பதவிநிலையில பின்னுக்கு இருந்த அந்தக் கச்சேரிப் பெரியவர், பதவிநிலையில மூத்தவை இருக்கேக்க அவையை விட்டிட்டு இன்னும் பதவிநிலை குறைஞ்ச ஒருத்தரை கச்சேரிக்கு மேலதிகப் பொறுப்பாளராப் போடேக்கையும் உந்தச் சங்கம் அதைக் கவனிக்காமல் அணிலேற விட்டுக்கொண்டிருந்ததோ?**

**கேள்வி 3: யாழ்ப்பாண எம்.பி. ஒருத்தர் கச்சேரியில நடந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில எல்லா அரச நிர்வாக அதிகாரிமாரையும் கேளாக்கேள்வி கேட்டு, அவமானப்படுத்தேக்க உந்தச் சங்கம் ஒரு கண்டனத்தைக்கூட வெளியிடாமல் எந்தப் பொந்துக்குள்ள போய் ஒளிச்சிருந்தது?**

**என்னென்ன விசயங்களுக்குப் பொங்க வேணுமோ, அந்த விசயங்களுப் பொங்காமல் இப்பிடி குற்றச்சாட்டுகளுக்காக இடமாற்றப்பட்டவைக்கு உந்தச் சங்கம் வக்காலத்து வாங்கவேண்டிய அவசியமென்னெண்டு ஒருத்தருக்குமே விளங்கேலை. அதிலையும் ஆருமே இதுவரை குறைசொல்லாத 'முச்சந்தி முரளி' யையும் உலகத்திலேயே முதல்முறையா குறைசொன்ன சங்கம் எண்ட சாதனையையும் உவையள் செய்திருக்கினம் கண்டியளோ?**

padsi@uthayan.com – பட்சி

## நெல்லியடி நகரில் நேற்று தீ விபத்து

நெல்லியடி நகர்ப்பகுதியிலுள்ள கடையொன்றில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது கரவெட்டிப் பிரதேசசபை ஊழியர்கள், அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்களுடன் இணைந்து செயற்பட்டுத் தீ விபத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். மின்னொழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் தீயில் எரிந்த சொத்து மதிப்பு 20 இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66,100,27)





## வாகன இயந்திரத்துக்கே வரி தீர்மானிக்கப்படும்!

கொழும்பு, மே 22

இறக்குமதிசெய்யப்படும் வாகனங்களுக்கான வரி, வாகனங்களின் இயந்திரத்தை வைத்தே தீர்மானிக்கப்படும். பெறுமதியை வைத்து அல்ல, எனப் பிரதி நிதியமைச்சர் சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

டீசல் வாகனங்களுக்கு அதிக வரி அறவிடப்படும் எனவும் பெற்றோல், ஹைபிரிட், மின்சார வாகனங்களுக்கு குறைந்த வரியே அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-41-6)

## முதியோர்களுக்கான மே மாதக் கொடுப்பனவு

சாவகச்சேரி, மே 22

தென்மராட்சிப் பிரதேசஅஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவு பெறும் முதியோர்களுக்கான மே மாதக் கொடுப்பனவுகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாளாகும். புதிய முயற்சிகள் சற்று இழுபறியாகி முடியும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பணிகளில்கூடுதல்கவனம்தேவைப்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிசெய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள்.

# படையினரை அரசாங்கம் மறந்து வருகின்றதாம்!

### சஜித் ஆதங்கம்



**கொழும்பு, மே 22**

**படையினரை அரசாங்கம் மறந்து வருகின்றது. பயங்கரவாதத்திலிருந்து இந்த நாட்டை விடுவித்த படை வீரர்களையும் பாதுகாப்புப் படையினரையும் போர் வீரர்கள் என்று அழைப்பது வெட்கக்கேடான விடயமல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

படை வீரர்களை நினைவு கூறும் நாள் என்பது தங்கள் இரத்தத்தையும் சதையையும் தானம் செய்த படை வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும். அவர்களின் நலனுக்காக வலுவானதொரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். கடந்த காலங்களில், சிவில் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த 34 ஆயிரம் பேருக்கு அற்ப ஊதியத்தை வழங்கி வீட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அரசாங்கமும் இத்தகைய கொள்கையையே பின்பற்றி வருகிறது. படையினரின் நலன்களை மையப்படுத்தி நல்ல திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த தலைவர்கள் பாதாள உலகத்துடன் தொடர்பு பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார். அவடைய குற்றச்சாட்டு உண்மையென்றால் பெயர் விவரங்களை வெளிப்படுத்துங்கள் என்றார். (ம-125)



## 'இசை நடன இரவு' நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், மே 22

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நுண்கலைப் பாடங்களைப் பயில்கின்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக நடத்தப்படுகின்ற ' இசை நடன இரவு' என்ற மாபெரும் நிகழ்ச்சி நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கான அனுமதிகளைப் பார்வையாளர்கள் திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ச-41)

## பாரம்பரிய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 22

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு அமுதவிழாவை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணியளவில் சங்கிலியன் மன்ற முற்றத்தில் நடத்தப்படவுள்ளது.

நிலையத் தலைவர் வி. ஜனகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஆஸ்தான வித்துவான் உயர்திரு. பிச்சையப்பா ரஜீவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் க. அறி வரசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## சுதுமலை புவனேஸ்வரி அம்பாளுக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 22

சுதுமலை அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்தமாதம் 3 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 7 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 9 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். முதலாம் திருவிழா தொடக்கம் 16 ஆம் திருவிழா வரை உதயகாலை பூஜை தினமும் காலை 5.30 மணிக்கு இடம்பெறும். திருவிழாக் காலங்களில் காலை 6 மணி முதல் 7 மணி வரை வேத பாராயணமும், அபிராமி அந்தாதியும் ஓதப்படும். அடியார்கள் தங்களால் இயன்ற சிவத்திரவியங்களைத் தந்துதவி அம்பாளை வழிபட்டு அருள்பெற்றுய்யுமாறு ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நம்முடைய கனவுகளை இலட்சியங்களை அடைய இடையிலுள்ள தடைக் கற்களை உடைக்கவேண்டும்.

– அம்பேத்கார் –

# பாரதத்தின் நீதி...(?)

அரசியற் தஞ்சம்கோரி இந்தியாவுக்குச் சென்றிருந்த ஈழத்தமிழ் அகதியொருவரின் குடியுரிமைக் கோரிக்கையும், இந்தியாவில் தஞ்சமடைவதற்கான (தங்குவதற்கான) கோரிக்கையும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் அடியோடு நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. நிராகரிப்புடன் நின்றுவிடாமல், 'உலகெங்கும் இருந்து வரும் அனைவரும் தங்குவதற்கு இந்தியா ஒன்றும் சத்திரமல்ல' என்றும் உச்சநீதிமன்றம் தன் நாவினால் சுட்டியிருக்கின்றது. 'இந்தியாவில், ஈழத்தமிழ் அகதிகளின் குறைந்தபட்ச வாழ்வுரிமைகூட உறுதிப்படுத்தப்படவில்லை'என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான, நிலையில், அந்த குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் ஆதாரமாகவே இந்திய உச்சநீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு அமைந்திருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, ஈழத்தமிழர்கள் உலகெங்கும் சிதறிச் சென்றனர். ஆனால், அவர்கள் அழிந்துவிடவில்லை. எங்கெல்லாம் தமிழர்கள் சென்றனரோ அங்கெல்லாம் வெற்றிக்கொடி விண்ணைநோக்கிப் பறந்து கொண்டிருக்கின்றன. பிரிட்டன் பாராளுமன்றத்தில் தமிழர் உள்ளார், ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தமிழர் உள்ளார், கனேடிய நாடாளுமன்றத்தில் தமிழர்கள் உள்ளனர். இவ்வளவு ஏன், இன்று கனடாவின் நீதித்துறை ஒரு தமிழரின் கைகளிலேயே (ஹரி ஆனந்த சங்கரி) ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்தியா மட்டும் இதில் விதிவிலக்கு. மேற்குறிப்பிட்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில், பெரும்பாலான விடயங்களில் இந்தியாவின் அடைவுமட்டம் குறைவானதுதான். ஏனெனில், இந்தியா ஈழத்தமிழர்களை வளர்க்கவும் இல்லை, அவர்கள் மூலம் தானும் வளரவில்லை.

கடந்த வருடம் இடம்பெற்ற இந்திய மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் அரசாங்கத்தால் அங்கு குடியுரிமைத் திருத்தச் சட்டம் புதுப்பிக்கப்பட்டது. இதன்மூலம், கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு - அதாவது சுதந்திர இந்தியா மலர்ந்த பின்னர், இந்தியாவுக்குள் தஞ்சமடையும் ஒருவர் இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் மிகவும் இலகுபடுத்தப்பட்டன. ஆனால், அந்த வாய்ப்பு அனைவருக்குமானதாக அமையவில்லை. அயல்நாடுகளில் வஞ்சிக்கப்படும் இந்துக்களும், சமணர்களும், பௌத்தர்களும் மற்றும் சீக்கியர்களும்தான் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ், இந்தியக் குடியுரிமையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் இலங்கைத் தமிழர்களைத் திட்டமிட்டு பழிவாங்கியது இந்தியா.

'சீனப் பின்னணியுடைய திபெத்தியர்களுக்கு, சகல வாய்ப்புகளையும் வழங்கி வரப்பிரசாதங்களையும் வழங்கி குடியுரிமையை வழங்கும் இந்தியா, ஈழத்தமிழர்கள் விடயத்தில் இவ்வளவு தூரம் பின்னிற்பது ஏன்?' என்ற கேள்வியைத்தான் இந்திய உச்சநீதிமன்றம் கேட்டிருக்கவேண்டும். அதுதான் அந்த நீதிக் கட்டமைப்புக்கு அழகும், பொருத்தமுமாகும். வேறு எந்தவொரு தரப்பினரை விடவும், ஈழத்தமிழர்கள் இந்தியக் குடியுரிமை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்கக் கூடுதல் உரித்துடையவர்கள். ஏனெனில், இலங்கையில் இடம்பெற்ற நீண்டதும் நெடியதுமான போரில் இந்தியாவின் நேரடித்தலையீடு மிகமிக அதிகம். ஒரு விதத்தில் பார்க்கையில், இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள அகதிகள் பிராந்திய வல்லாதிக்க சதிராட்டத்தின் பிரதிபலிப்புத்தான்.



## வங்கிக் கணக்குகளுக்கு 'ரின்' இலக்கம் கட்டாயம்



இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அனுமதி


**கொழும்பு, மே 22**
**வங்கிக் கணக்குகளைத் திறக்கும்போது வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை (TIN) சமர்ப்பிப்பதை கட்டாயமாக்கும்வகையில் உள்நாட்டு இறைவரிச்சட்டம் திருத்தப்படவுள்ளது.**

கடந்த ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்துநடைமுறையாகும் வகையில் 18 இலட்சம் ரூபாவுக்கும் விஞ்சாத தொகையை வருடாந்த வருமானமாகப் பெறுவோருக்கு அறவிடப்படும் நிறுத்திவைத்தல் வரியை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வரிவிதிப்புக்கு உட்படுவோர் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள் என்பதால் வரிவிதிப்பிலிருந்து விடுபடுவதற்கு சுயபிரகடனத்தைச் சமர்ப்பிக்கின்ற முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. அத்தகைய சுயபிரகடனத்தை அறிமுகப்படுத்தவும், வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்காக வரிசெலுத்துவோர் அடையாள இலக்கத்தை சமர்ப்பிப்பதையும் கட்டாயமாக்குவதற்கான திருத்தங்களுடன், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தைத் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)

## சேமலாப நிதிய சேவைகள் இடைநிறுத்தம்



கொழும்பு, மே 22
ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகள் நாளைவரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தொழில் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். டிஜிட்டல் தரவு அமைப்பின் பராமரிப்புப் பணிகள் காரணமாகவே சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



## கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலர்

கொழும்பு, மே 22
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக கலாநிதி பீ.கே.கோலித கமல் ஜினதாச நியமிக்கப்பட்டுள்ளார்.
அவருக்கான நியமனக்கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துவழங்கப்பட்டது. (ச-இ)

## நெடுஞ்சாலைக் கட்டணம் செலுத்த புதிய வசதி

கொழும்பு, மே 22
அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது வங்கி அட்டைகளைக் கொண்டு இனிமேல் கட்டணங்களைச் செலுத்தமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## போரில் பாதிப்புற்ற படையினருக்காக வாகனங்கள் அன்பளிப்பு

கொழும்பு, மே 22
உள்நாட்டுப் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிப்பாய்களின் புனர்வாழ்வு நிலையங்களுக்கு ஐந்து வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.
ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பணிப்பின் பேரிலேயே இந்த வாகனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ச-41-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை வெள்ளிக்கிழமை- வைகாசி 09
23.05.2025
சுபநேரம் : 05.52- 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

# விடுமுறை நாள்களில் செயலமர்வு நடத்தாதீர்

### இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

விடுமுறை நாள்களில் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடத்துதல் கூடாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் அதாவது யாழ். வலயம் மற்றும் ஏனைய வலயங்களிலும் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் சனி, ஞாயிறு மற்றும் ஏனைய விடுமுறை நாள்களில் நடத்தப்படுவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. குறிப்பாக, யாழ். வலயப் பாடசாலைகளில் முதன்மை நிலை ஒன்று ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இவ்வாறு விடுமுறை நாள்களில் நடத்தப்படுகின்றன. இதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்தச் செயலமர்வுகள் பாடசாலை நாள்களில் மாத்திரம் ஆசிரியர்களுக்கு நடத்தப்படவேண்டும் .

ஆசிரியர்களின் முறைப்பாடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-33-17)

கிளிநொச்சியில்

# 37.5 மில்லியன் செலவில் ஆறு வேலைத்திட்டங்கள்

கிளிநொச்சி, மே 22

**உலக உணவுத்திட்டமும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஆகியன இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 37.5மில்லியன் ரூபா செலவில் ஆறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளன.**

கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் இரண்டு திட்டங்களும் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நான்கு திட்டங்களுமாக மொத்தமாக ஆறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அதற்கமைய கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் பிரமந்தனாறுக் கிராமத்தில் கழிவுநீர் வாய்க்கால் துப்பரவுத்திட்டம் ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு பிரமந்தனாறுக் கிராமத்தில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. குறித்த நிகழ்வில் மேலதிக மாவட்ட ச் செயலர் (காணி) நளாயினி இன்பராஜ், உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான திட்டப் பொறியியலாளர் சந்திர திலக உள்ளிட்டோர் கலந்துகொண்டு குறித்த திட்டத் தினை ஆரம்பித்துவைத்தனர். இத்திட்டம் மூலம் கிராமத்தின் கழிவு வாய்க்கால், குளங்கள் என்பவற்றைத் துப்பரவு மற்றும் புனரமைப்புச் செய்வதனூடாக விவசாயச் செய்கையும் முன்னேற்றமடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)



# விலைவீழ்ச்சியால் வாழைச்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 22

வாழைப்பழத்தின் விலை மேலும் வீழ்ச்சியடைந்ததையடுத்து வாழைச்செய்கையைக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கதலி வாழைப்பழத்தின் விலை 40 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சந்தைகளில் வாழைக் குலைகளை சந்தைப்படுத்தமுடியாதுள்ளது. சந்தைப்படுத்தமுடியமால் காணப்படும் வாழைக்குலைகள் கால்நடைகளுக்கே தீவனமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் தோட்டங்களில் வாழைக்குலைகளை பறவைகள் இரையாக்குகின்றன. இந்நிலையிலேயே வாழைச்செய்கையைக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-33-17)



# மாற்றுத்திறனாளிகளை மதிப்பளிக்கும் நிகழ்வு

கொழும்பு, மே 22

கொழும்பு ஹோமாகமவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நிலை விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற யாழ். மாவட்ட வீர,வீராங்கனைகளை மதிப்பளிக்கும் நிகழ்வு மாவட்டச் செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் கலந்துகொண்டார். (ச-25,9)

# கம்பளையைச் சேர்ந்தவர் முல்லை விபத்தில் பலி!




முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு உடையார்கட்டு சுதந்திரபுரம் சந்திக்கு அருகில் புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் இடம்பெற்ற விபத்தில் கம்பளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். சுதந்திரபுரத்தைச் சேர்ந்த மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்தபோது வீதியில் நின்ற கால்நடையுடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்தவரின் உடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. காயமடைந்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதான மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்கள். (ச-19)



# ‘டிமிக்கி’விட்டுத் தப்பிய டிப்பர்; துப்பாக்கிச்சூடு நடத்திப் பிடிப்பு!

யாழ்ப்பாணம், மே 22

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப்பகுதியில் சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொடிகாமம் பொலிஸார் டிப்பரைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வரணி மந்துவில் வீதியில் இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பளைப் பகுதியிலிருந்து சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தை எழுதுமட்டுவாழ் பகுதியில் கடமையிலிருந்த கொடிகாமம் பொலிஸார் நிறுத்த முயற்சித்தனர். இதன்போது டிப்பர் வாகனம் நிறுத்தாது கொடிகாமம் பகுதியை நோக்கித் தப்பியோடியது. அதனையடுத்து பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் கொடிகாமம் பகுதியிலும் பொலிஸார் நிறுத்த முயற்சித்தபோது குறித்த டிப்பர் வாகனம் நிறுத்தாது வரணியை நோக்கித் தப்பியோடியது.

இதையடுத்து பொலிஸார் குறித்த டிப்பரை தமது வாகனத்தில் துரத்திச் சென்றபோது வரணி மந்துவில் வீதியால் திரும்பி டிப்பர் வேகமாகத் தப்பியோட முயற்சித்த நிலையில் பொலிஸார் டிப்பார் வாகனத்தின் ரயர்களை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதன்போது குறித்த டிப்பர் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி உட்பட இரண்டு சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளநிலையில் பொலிஸார் டிப்பரை கையகப்படுத்தி கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-15,28)

# விவசாயக் கூட்டுறவு சமாசம் விரைவில் இயங்குநிலை

யாழ்.மாவட்ட நுகர்வு விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் மீண்டும் பொருள்கள் கொள்வனவுசெய்யப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த சில வருடங்களாக பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கான நுகர்வுப்பொருள்களை விநியோகம் செய்யாத நிலையில் மேற்படி சமாசம் காணப்படுகின்றது. இந்தநிலையில் இது தொடர்பாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் தலைமையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், நுகர்ச்சிக் கூட்டுறவு சமாச பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் சமாச மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் நுகர்வு சமாசம், அத்தியாவசிய நுகர்வுப்பொருள்களை கொள்வனவு செய்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அதன்படி எதிர்வரும் 29ஆம் திகதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கூட்டுறவுச் சங்கத்துக்கான மாதாந்தக் கூட்டத்தில் இதுதொடர்பில் முடிவெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
15
06
1951



மறைவு
21
05
2025

### செல்வநாயகம் கிறிஸ்டோபர் கருணேந்திரன்

(இளைப்பாறிய யாழ்ப்பாணக் கல்லூரி கணக்காளர்)

கோப்பாயை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் கிறிஸ்டோபர் கருணேந்திரன் நேற்று 21.05.2025 (புதன்கிழமை) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செல்வநாயகம் அவர்களின் அன்பு மகனும், பிரேமினி (முன்னாள் பாலர் பாடசாலை ஆசிரியர், ஆசன தேவாலயம் வட்டுக்கோட்டை) அவர்களின் அன்பு கணவரும், ஐவன் டிஷானின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வேந்திரன், பாலேந்திரன் மற்றும் ராஜேந்திரன், ஜேயெந்திரன், ஞானேந்திரன், ரவீந்திரன் மகேந்திரன், நிர்மலன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் இன்று 22.05.2025 மாலை 03.00 மணிக்கு நடைபெற்று, யாழ்ப்பாணம் கொட்டடி, மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 719 8534**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை மயிலிட்டி உப அலுவலகம்,**
விண்ணப்பதாரரின் பெயர்: சிவராசா பெண் சிவதர்சினி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட மயிலிட்டி கட்டுவன் வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள இவ்ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 05 மயிலிட்டிகட்டுவன் வீதியில் அமைந்துள்ளது. குறித்தஆதனம் பிரசித்தநொத்தாரிஸ் சந்தோசம் ஜேசுநேசன் முகதாவில் உறுதி இலக்கம் 118ம் இலக்கத்தில் 2021.02.10 அன்று நிறைவேறிய திருத்தல் உறுதியின் பிரகாரம் குறித்த சிவராசா பெண் சிவதர்சினிக்கு வந்தடைந்தது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குபகுதி மயிலிட்டி கோவிற்பற்றும் வீரமாணிக்கத்துறை இறை இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் A.கந்தசாமி அவர்களின் 2019.10.05ம் திகதி 5533ஆம் இலக்க வரைபடத்தின்படி இலக்கம் துண்டு 2 ஆகும்.

**இதற்குஎல்லைகள்**

கிழக்கு வீதி
வடக்கு அருமைத்துரை கைம்பெண் புவனேஸ்வரியின் ஆதனம்
மேற்கு இளையதம்பி சுந்தரலிங்கம் பெண் சற்குணதேவியின் ஆதனம்
தெற்கு பாதை

மேற்குறித்த ஆதனத்தை சிவராசா பெண் சிவதர்சினி என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS 58324) E-1

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

தோற்றம்
20
11
1953



மறைவு
03
05
2024

**கடந்த 03.05.2024 அன்று இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவி**

### அமரர் சின்னத்துரை சிவகாம்பிகை

விழிகளும் உன்னைத் தேட விடியல் பல தனித்தோட
வழிகளும் ஏதும் உண்டோ வையகம் நீ மீண்டும் காண...
ஆண்டு ஒன்று போகும் அகிலமும் உருண்டு போகும்
ஆயினும் உந்தன் அன்பு அகலுமா நெஞ்சை விட்டு
என்றென்றும் எங்களுடன் இணைந்திடுவீர் என
எண்ணிலா கனவுகள் கொண்டிருக்க
இடையில் காலன் பிரித்ததேனோ
விழிநீர் பூக்களால் உன் பாதம் தான் நனைத்து
விடியலை வேண்டுகின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கரம்பன் கிழக்கு, காளிகோவிலடி**
**ஊர்காவற்துறை.**

(CS 58316) E-1

**கணவர் மற்றும் குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
17
02
1970



இறப்பு
21
05
2025

### இந்திரகுமார் நாகநந்தினி

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரகுமார் நாகநந்தினி நேற்று (21.05.2025) இறைவனடி சேர்ந்தார். அன்னார் குமாரசாமி - இராசமலர் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் கமலாதேவி தம்பதியினரின் அன்பு மருமகளும் இந்திரகுமார் (தபால்திணைக்கள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் விதுஷன் (கனடா), துளசிகா (உயர் தொழில்நுட்பக்கல்லூரி), சுவஷ்திகா (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு தாயாரும், இந்திரகுமாரன் (சுவிஸ்), சுதாசினி (சுவிஸ்), துஷ்யந்தி (பிரதேச செயலகம் - உடுவில்), ஆகியோரின் அன்பு சகோதரியும், கயல்விழி, பிரபாகரன், கணேந்திரன், சாந்தகுமாரி, ரவிக்குமார், ராஜேந்திரன், காலஞ்சென்றவர்களான சாந்தகுமார், வசந்தகுமார், ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (23.05.2025) வெள்ளிக்கிழமை, பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"இந்திரவாசம்"**
**அளவோடை வீதி,**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 58327) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

- மேசன் Rs. 3000.00 - 3500.00
- மேசன் உதவியாளர் Rs. 2500.00 - 2700.00
- வெல்டர் Rs. 3000.00 - 3500.00
- தச்சு வேலை Rs. 3000.00 - 3500.00
- பெயின்றர் Rs. 2500.00

துணை ஒப்பந்தகாரர் (Sub Contractor தேவை - வேலைக்கான விலை விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : 077 210 0749
(காலை 8.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்
(CS 3214) J-1

## Selection of Rent-a-car Service Provider for the Project for Research and Education Capacity Improvement in Dry Zone Agriculture at University of Jaffna (PRECIDA-UOJ)

PRECIDA-UOJ under technical cooperation by Japan International Cooperation Agency (JICA) is seeking for a rent-a-car service provider for the project that can provide vehicles with drivers for long-term till the end of March 2026.

The eligibility of the applicants is:

- Able to provide at least 2 vehicles (sedan and / or SUV) with drivers on a daily basis throughout the year
- Experience of providing the vehicles to governmental organizations and international agencies on a long-term basis continuously for more than 6 months in the last 3 years
- Fluency in English of the applicant and staff
- Good documentation skills in English

Interested applicants are requested to contact the email address below to obtain "Request for Quotation (RFQ)", including Criteria & Terms of Reference. The PRECIDA-UOJ evaluates all applied proposals and credentials in the submitted RFQ and supporting documents.

- Request the documents for RFQ to precidaps1@gmail.com with a title "Request for RFQ (Rent-a-car)"
- Closing date and time for the Request is 12:00 pm on June 02nd (Monday), 2025

**PRECIDA-UOJ**
Project for Research & Education Capacity Improvement in Dry Zone Agriculture at University of Jaffna



ஸ்தாபிதம் 1945.05.31
பதிவு இல HA/S/JA/419

## அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்
### வருடாந்த வெளிமடை உற்சவம் 2025

அம்பாள் அடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் வைகாசிமாதம் மேற்படி ஆலயத்தின் வெளிமடை நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கு முறையில் நடைபெற அம்மன் அருள்பாலித்திருக்கிறது. எனவே அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமாட்டியின் இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறுவீர்களாக.

| | |
|---|---|
| விளக்கு வைப்பு | 23.05.2025 வெள்ளிக்கிழமை காலைப் பூசையுடன் இடம்பெறும். |
| மடைப்பண்டம் எடுத்தல் | 30.05.2025 வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும். |
| வெளிமடைப் பூசை | 31.05.2025 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறும். |
| 8ஆம் மடை | 06.06.2025 வெள்ளிக்கிழமை மாலைப் பூசையுடன் நடைபெறும். |

- காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 30.05.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை மேற்கொள்ளலாம்.
- வெளிமடை உற்சவத்தை முன்னிட்டு கடைகள் அமைக்க விரும்புவோர் 28.05.2025 புதன்கிழமை ஆலய தருமபரிபாலன சபை அலுவலகத்தில் காலை 9.00 முதல் தங்களது பதிவினை மேற்கொள்வதுடன் தங்களுக்கான இடத்தினை ஒதுக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.
- 31.05.2025 சனிக்கிழமை காலை வெளிமடைப்பூசை நிறைவடைந்ததை தொடர்ந்து ஆடு, கோழி ஏலவிற்பனை இடம்பெறும்.

அருள்மிகு தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் வேள்வி உற்சவம் 06.06.2025 வெள்ளிக்கிழமை விளக்கு வைத்து 13.06.2025 வெள்ளிக்கிழமை வேள்வி நடைபெறும். இடைப்பொங்கல் 16.06.2025 திங்கட்கிழமை நடைபெறும்.

அலுவலக தொ.பே.இல 021 205 6060

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தரும பரிபாலனசபை

சுகாதாரச் சீர்கேடு

## குளிர்பான நிலையத்துக்கு ரூ.50,000 தண்டம்!

கிளிநொச்சி, மே 22

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய குளிர்பான நிலையை மொன்றுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. பூநகரி மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜெ. றொனால்ட் தலைமையில் முழங்காவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இ. தர்மிகனும் இணைந்து அண்மையில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது சுகாதாரச்சீர்கேடுகளுடன் குறித்த குளிர்பான நிலையம் இயங்கிவந்தமை அவதானிக்கப்பட்டது. அதனையடுத்து குளிர்பான உரிமையாளருக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. வழக்கை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார். (ச-26.9)

## வேலையாட்கள் தேவை

- தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT-Civil
- உதவி தொழிநுட்ப உத்தியோகத்தர் (TA)
- கணிய அளவையியலாளர் (QS) HND or NCT QS
- உதவி கணிய அளவையாளர் (AQS)

சுயவிபரக்கோவையை Whatsapp/Email மூலம் அனுப்பி வைக்கவும்.
Email-starbuilders2025@gmail.com
074 112 9148 யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றம்

காந்தியூரைச் சேர்ந்த ரவீந்திரன் புகலேந்திரன் ஆகிய நான் எனது பெயரை ரவீந்திரன் புகனேந்திரன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ரவீந்திரன் புகனேந்திரன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

ரவீந்திரன் புகனேந்திரன்

## ஆதனங்களை மதிப்பீடு செய்தல் சம்பந்தமான அறிவித்தல்
### வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரிய குள வீதி, நெளுக்குளம்.

எமது பிரதேச சபைக்குட்பட்ட மகாறம்பைக்குளம், பம்பைமடு, பூவரசன்குளம், சேமமடு, சாளம்பைக்குளம், கந்தபுரம், நெளுக்குளம், மருக்காரம்பளை வட்டாரங்களில் அமைந்துள்ள சகல ஆதனங்களின் ஆதன மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

எனவே எமது பிரதேச சபைக்குட்பட்ட வீட்டுடைமையாளர்கள், வியாபார நிலைய உடைமையாளர்கள், பாடசாலைகள், வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் அனைத்து ஆதன உடைமையாளர்களினையும் எமது பிரதேச சபை மேற்கொள்ளும் குறித்த ஆதன மதிப்பீட்டிற்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்,
வவுனியா தெற்கு
தமிழ் பிரதேச சபை. (CR/45046) J-1 22.05.2025

## இலங்கை மின்சார சபை
### கேள்வி அறிவித்தல்

யாழ் ஒளி மின் நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்

**சேவைகளுக்கான கேள்வி கோரல்**

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக (சுன்னாகத்தில் இருந்து கொழும்பு - கொழும்பு இருந்து சுன்னாகம்) ஆகக் குறைந்த 26 ஆசனங்களைக் கொண்ட பயணிகள் பேருந்து (Bus) ஒரு வருட (One year) வாடகை அடிப்படையில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப 3.00 மணி வரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர், யாழ் ஒளி மின்நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம். தொ.பே.இல. 021 224 2247/8 | Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. Telephone No.0112 423 897 |

கேள்விப்பத்திர பெறுமதி - ரூபா. 3,000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு - ரூபா. 55,000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 18/06/2025 பி.ப 10.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.


## நுளம்புக் கட்டுப்பாட்டு களத்தரிசிப்பு ஆரம்பம்

நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்றிட்டம் இன்று தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமயநிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்கவேண்டும். நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான நிலைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
26 . 08 . 1952



இறப்பு
21 . 05 . 2025

### சுப்பிரமணியம் மகாலிங்கம்

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாலிங்கம் அவர்கள் நேற்று புதன்கிழமை (21.05.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், கலைச்செல்வி, கலைச்செல்வன், கலைமதி, கலைரூபி, கலைவாணி, வேணுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயச்சந்திரன், புவிசெல்வி, செல்வதர்சன், மதவர்ணன், ஆகியோரின் மாமனாரும், தட்சாயன், தர்மிளன், யதுர்சனா, அபிஷனா, ஆர்த்திகன், கேஷனா, கவிநயன், தனுசியன் ஆகியோரின் அருமை பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (22.05.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக காக்கதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சுதுமலை தெற்கு,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 664 4342 (மகன்)**
**077 061 8412 (மகள்)**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வேலணை பிரதேச சபை, வேலணை

வேலணை பிரதேச சபையின் வேலணை உபஅலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 05 ஆம் வட்டாரம், வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபையின் சார்பாக தலைவர் திரு.சுப்பிரமணியம் திசநாயகம்பிள்ளை மற்றும் செயலாளர் திருமதி.ஞானசௌந்தரி சிவநாதன் ஆகியோரின் விண்ணப்பம் தொடர்பானது.

வேலணை வங்களாவடி முருகன் ஆலயம், 05 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனத்தின் உறுதியின் பிரகாரம் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று, வேலணை கிழக்கு இறை **"வேம்படியிற்சீமாவும் உலுக்கன்சீமாவும், நொச்சிக்காடும் மறுபிரிவுகளும்"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு பதினெட்டும் (18) கோவிலும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் ஆகிய விஸ்தீரணமுள்ள இவ்ஆதனம், பிரசித்த நொத்தாரிசு திரு.சிவலிங்கம் இளங்கீரன் அவர்களினால் எழுதப்பட்ட 17667 ஆம் இலக்க 2025.03.05 ஆம் திகதிய பிரகடனம் உறுதி மூலம் வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபையின் சார்பாக தலைவர் திரு.சுப்பிரமணியம் திசநாயகம்பிள்ளை மற்றும் செயலாளர் திருமதி.ஞானசௌந்தரி சிவநாதன் ஆகியோர் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**ஆதன விபரம்**

நிலஅளவையாளர் திரு.S.தனபாலசிங்கம் அவர்களினால் வரையப்பட்ட 0723 ஆம் இலக்க 2025.04.19 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 17 குளி 16.75 (4610.58) விஸ்தீரணமுள்ள இவ்ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு..

கிழக்கு :- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி.
வடக்கு :- வேலுப்பிள்ளை நடராஜாவுக்கும் பெண் கமலாம்பிகைக்குமுரிய ஆதனமும் குறித்த ஆலயத்துக்குரிய ஆதனங்களும்.
மேற்கு:- குறித்த ஆலயத்துக்குரிய ஆதனங்களும் சங்கரப்பிள்ளை சுந்தரமூர்த்தியின் ஆதனமும்.
தெற்கு :- குறித்த ஆலயத்துக்குரிய ஆதனமும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதனமும் இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை வேலணை வங்களாவடி முருகன் ஆலய பரிபாலன சபையின் சார்பாக தலைவர் திரு.சுப்பிரமணியம் திசநாயகம்பிள்ளை மற்றும் செயலாளர் திருமதி.ஞானசௌந்தரி சிவநாதன் ஆகியோர் பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் உறவினர்கள் மூலமாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் மேற்குறித்த காலப்பகுதியினுள் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பங்களில் விண்ணப்பாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ளப்படுமென்பதையும் மேற்குறித்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதனால் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளுக்கு வேலணை பிரதேச சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காதென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**

(CS/3218) J-1

**வீடு விற்பனைக்கு**
3 பரப்பு காணி சுற்று மதிலுடன்
9 அறைகள், 2 அறைகள் A/C, டைல்ஸ்
இணைந்த குளியலறைகளுடனான
4 அறைகள் மற்றும் 5 அறைகள் உடனான
வீடு விற்பனைக்கு.
கண்டி வீதி, அரியாலை,
TATA Company க்கு எதிரில்)
Office, Hotel, Home க்கு உகந்தது.
விலை 4 கோடி 25 இலட்சம்
தொடர்பு:- 077 243 9521

## மஹோற்சவம்

கோண்டாவில் தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய 50ஆவது ஆண்டு மஹோற்சவப் பெருவிழா, எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஜூன் மாதம் 9ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (ம)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
02 . 10 . 1927



மறைவு
22 . 04 . 2025

கடந்த 22.04.2025 செவ்வாய்ககிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் கந்தசாமி பாக்கியம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 20.05.2025 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 22.052025 வியாழக்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வராகி அம்மன் கோவில் வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**நன்றி.**

**குடும்பத்தினர்.**
**021 221 3333**

## அந்தியேட்டி அழைப்பிதழ்

தோற்றம்
23 . 06 . 1970



மறைவு
07 . 04 . 2025

### அமரர் மாணிக்கம் கோபாலகிருஷ்ணன்

குடும்பத்தின் ஆணிவேராக நின்று எமைக் காத்த சகோதரனே.
உன் சந்தோசம் அனைத்தும் மறந்து எங்கள் சந்தோசமே.
உன் சந்தோசம் என வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே.
உன் இழப்பைத் தாங்கும் சக்தியும் எம்மிடம் இல்லையே
தாயை இழந்து கண்ணீர் காயமுன்னே ஓராண்டு கடந்து உன்னையும்
-இழந்தோமே
எங்கு சென்று தான் ஆறுதல் அடைவதோ தெரியவில்லையே
உம்மை போல் உதவும் மனப்பான்மை கொண்ட ஒருவனை இனி நாம்
காணத்தான் -முடியுமோ

**அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (20.05.2025) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. (22.05.2025) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்த கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 01 . 1941



மறைவு 21 . 05 . 2025

### பரமேஸ்வரன் தையல்நாயகி

கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **பரமேஸ்வரன் தையல்நாயகி** அவர்கள் நேற்று (21.05.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவதர்சினி (கனடா), கிரிதரன், ஆகியோரின் அன்பு தாயாரும், கணேசதாஸ் இன் அன்பு மாமியாரும், ஆர்வலன், அபூர்வன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, சந்திரசேகரன் மற்றும் தங்கமணி (இணுவில்) யின் பாசமிகு சகோதரியும், பொன்னையா, மகேஸ்வரி, மனோன்மணி, சற்குணதேவி, மற்றும் காலஞ்சென்ற சண்முகவடிவேல் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில்.

தகவல்,
குடும்பத்தினர்.
077 538 8670

# இதயத்தில் இரத்தக்கசிவு இளைஞர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 22

தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது மயங்கி வீழ்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தேவாலய வீதி, சங்கானை பகுதியைச் சேர்ந்த பரமானந்தம் கோவிந் (வயது 26) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு உணவருந்திவிட்டு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்துள்ளார். இதன்போது, திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் வீட்டிலேயே மயக்கமடைந்துள்ளார்.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு, சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதய உறை அறைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-27)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 . 04 . 1937



மறைவு 19 . 05 . 2025

எமது தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை உறுப்பினர் திரு.இ.திரவியநாதன் அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் இராமச்சந்திரன் மகேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஞானவைரவப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை

## 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள சுறாத்துடுப்பு, சுக்கு பறிமுதல்

சென்னை, மே 22

இந்தியா மண்டபம் பகுதியில் வீடொன்றில் இலங்கைக்குக் கடத்துவதற்காகப் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள சுறாத் துடுப்புகள், சுக்கு உள்ளிட்ட பொருள்கள் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதில் 15 மூடைகளில் சுறாத் துடுப்புகளும் 4 மூடைகளில் சுக்கு மற்றும் 4 மூடைகளில் செருப்புகள் உள்ள டங்கலாக 23 மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும் கடல்வழியாக இலங்கைக்குக் கடத்திச் செல்வதற்காகப் பதுக்கிவைக்கப்பட்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-56)

# மரண அறிவித்தல்

## கேதீஸ்வரன் கௌரி



தோற்றம் 25.03.1970 மறைவு 21.05.2025

பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேதீஸ்வரன் கௌரி அவர்கள் நேற்று (21.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் கணமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும் வேணுகாணன், தேனுகா, தேனுசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தபாஸ்கரன் (கனடா), அன்புமலர் (பிரான்ஸ்), சுமதி (சுவிஸ்), நிஷாந்தன் (சுவிஸ்), மல்லிகா ஆகியோரின் சகோதரியும் ஜெகதீஸ்வரன் (அமெரிக்கா), ஜெயகதீஸ்வரி, விக்னேஸ்வரன், காலஞ்சென்ற விக்னேஸ்வரி, குகனேஸ்வரன் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (லண்டன்), மோகனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (23.05.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்

பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 905 0188

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்களைப்...

றொழில் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ், கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரை கடற்றொழில் அமைச்சில் வைத்து நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே, அரசாங்கத்துக்கு எதிராகவும், மக்களைத் தூண்டிவிட்டு நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் விதமாகவும் பல்வேறு தீய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்ற விடயத்தை தூதுவரின் கவனத்துக்கு கடற்றொழில் அமைச்சர் கொண்டுசென்றார். கடந்தகால அரசாங்கங்கள் தமிழ் மக்களைப் பெரும்பாலும் புறக்கணித்தன. ஆனால், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தப் பாகுபாடுமின்றி அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த உறுதிபூண்டுள்ளது. ஊழல், மோசடி மற்றும் இனவாதம் இல்லாத நாட்டை உருவாக்குவதே பிரதான நோக்கம் என்றும் கனேடியத் தூதுவரிடம் அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு கனடா என்றும் துணைநிற்கும் என்று கனேடியத் தூதுவர் உறுதிவழங்கினார். அத்துடன், தமிழ் மக்களால் அநுர அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய மக்களாணையையும் கனேடியத் தூதுவர் எரிக் வால்ஷ் பாராட்டினார். (அ-ம-இ)

## அநுரவின்...

போன்ற செயற்பாடுகளைத் தகர்த்தெறிவார் என்று தமிழர்கள் நம்பினார்கள். அதனால்தான் அவர்கள் பெருவாரியான வாக்குகளை அவருக்கு வழங்கினார்கள். ஆனால், தற்போது அவருக்கு வாக்களித்த தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

காணாமற்போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட முன்னைய அரசாங்கங்களின் தோல்வியுற்ற முயற்சிகளையே அநுர அரசாங்கமும் முன்னெடுத்து வருகிறது.

தமிழர்களை இலக்குவைத்து நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்படவேண்டுமானால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து நடைமுறைப்படுத்திவருகிறது.

தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத - அவர்களால் நிராகரிக்கப்பட்ட உள்நாட்டுப் பொறிமுறையை வலியுறுத்துவதை விடுத்து, பொறுப்புக்கூறல் திட்டத்தை புதுப்பிப்பதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை நிரூபிப்பதனூடாக அரசாங்கம் நீதியை நிலைநாட்ட வேண்டும் - என்றுள்ளது. (அ-ச-6)

## கொக்கிளாயில்...

மகேஸ்வரன் நர்மதா (வயது-8) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார். பாடசாலைக்கு எதிர்ப்பக்கமாக உள்ள கடையில் உணவு வாங்குவதற்காகச் சென்றுவிட்டு, மீண்டும் திரும்பிய போதே பட்டா ரக வாகனமொன்று மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

படுகாயங்களுடன் மீட்கப்பட்ட மாணவி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய சாரதி புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-19)

## முந்திச்...

வாகனத்தை முந்திச்செல்வதற்கு முற்பட்டபோதே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. தெய்வாதீனமான எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-27)

## உப்புப்...

யுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி ஆட்சியேற்று 7 மாதங்கள் கடந்துள்ளன. ஆனால் இன்னும் நாட்டில் சில உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்குத் துரித தீர்வுகளை அரசாங்கத்தால் வழங்கமுடியவில்லை. அரிசித் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து தற்போது உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களாக அரச உப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவே உப்பு இறக்குமதி செய்யப்பட்டது. உப்பை இறக்குமதி செய்வதற்கு எந்தத் தனியார்துறையினருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அவ்வாறாயின், அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட உப்பு எங்கே? அந்த உப்பு ஏன் சந்தைக்கு வரவில்லை? அவற்றுக்கு என்ன நடந்தது?

புத்தளம் உப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக இருக்கும் நபரே, உப்பை விற்பனை செய்யும் தனியார் நிறுவனமொன்றின் தலைவராக இருக்கிறார். அவரே இறக்குமதி செய்யப்படும் உப்பை தனது நிறுவனத்துக்குக் கொண்டுசெல்கின்றார். எனவே, உப்பைத்தேடி புறக்கோட்டைகளில் உள்ள பெட்டிக்கடைகளில் சோதனை நடத்தாமல், அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் பகுதிகளில் சோதனை நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியாவில் ஒரு மெற்றிக்தொன் உப்பின் விலை 80 டொலராகும். அதனைக் கொண்டுவரும்போது ஒவ்வொரு கிலோவுக்கும் அரசாங்கம் 40 ரூபாவை வரியாக அறவிடுகின்றது. அனைத்துச் செலவுகளையும் சேர்த்தால் ஒருகிலோ உப்பை 100 ரூபாவுக்கு வழங்க முடியும். ஆனால், செயற்கையாகத் தட்டுப்பாட்டை உருவாக்கி, இன்று ஒரு கிலோ உப்பை 350 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்கின்றனர் - என் (அ-ம-இ)

## பூவரசங்குளம்...

றில், ஐந்து இலட்சம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்டபோதே அவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இன்று அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## காங்கேசன்...

நா.வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநர் அலுவலகம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:-

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த 20ஆம் திகதியன்று தனியார் துறையின் போக்குவரத்தைச் சீரமைப்பது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது, 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பேருந்து சேவைகளை காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது. எனவே, இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக பேருந்துகள் பயணிக்கின்றனவா என்பதை கண்காணிக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார் - என்றுள்ளது. (அ-ம-இ)

## தனியார்...

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இருந்து புறப்படும் 764 வழித்தடப் பேருந்துகள் கடந்தகாலங்களில், வயாவிளான் சந்தியுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன. அதனால் மயிலிட்டிப் பகுதியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி, யாழ்ப்பாண நகரில் இருந்து புறப்படும் 769 வழித்தடப் பேருந்துகள் மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட்டன.

தற்போது, யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தடப் பேருந்துகள், பலாலி வீதியூடாக பருத்தித்துறை பொன்னாலை வீதியை அடைந்து, அதனூடாக காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பேருந்து நிலையம் வரையில் சேவையில் ஈடுபடுகின்றன. அதேபோன்று காங்கேசன்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றன.

இதே பயண ஆரம்பப்புள்ளியையே 769 பேருந்துகளும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு எதிராகவே, அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தின் ஊடாக செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால், தாம் இதுவரைகாலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு, காங்கேசன்துறை வீதி வழியாக மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட அனுமதிக்கவேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-20-26)

## யானைத்...

வவுனியா - கண்னாட்டி கணேசபுரம் பகுதியில் காட்டுயானை தாக்கியதில் சுப்பிரமணியம் (வயது-63) என்பவர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். அவரின் இறுதிச்சடங்குகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, பொதுமக்கள் சடலத்துடன் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறக்கிய யானைகளை ஏற்றி அனுப்பு, உயிரை பாதுகாக்க வழி சொல், விவசாயத்தைக் காப்பாற்று, அரசே காட்டு யானைகளுக்கு ஒரு வழிசொல் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஏந்தியிருந்தனர். (அ-ம-110)

## உயிரிழந்தோரை...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இராணுவத்தினரைப் பற்றிப் பேசுகின்றார். புலிகள் அமைப்புக்கு ஆயுதம் வழங்கியது யார்? எனவே, இராணுவம் தொடர்பில் கதைப்பதற்கு சஜித்துக்கு தார்மீக உரிமை உள்ளதா? என்று கேட்க விரும்புகின்றேன்.

படையினர் நினைவுநாள் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்றார். அங்கு அவர் ஒரு வசனம்கூட இனவாதம் பேசவில்லை. இதுதான் எமது கொள்கை. தெற்கைப் போலவே நீதி, நியாயம் மற்றும் நேர்மைக்காக குரல் எழுப்பிய வடக்கு இளைஞர்களும் வீரர்கள்தான். தெற்கில் இளைஞர்கள் சாகும்போது மட்டுமல்ல, வடக்கில் இளைஞர்கள் சாகும்போதும் எமக்கு கண்ணீர் வந்தது.

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையும், அஞ்சலிக்கும் உரிமையும் அனைவருக்கும் உள்ளது. இதில் வடக்கு மட்டும் விதிவிலக்கல்ல. வடக்கில் உயிரிழந்த இளைஞர்களும் அஞ்சலிக்கப்படவேண்டியவர்கள். அதில் எந்தத் தவறும் கிடையாது.

அவர்களும் இலங்கையர்கள்தான். ஏதேனும் காரணத்துக்காக போர் ஏற்பட்டிருக்கலாம். இருதரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. காணாமற்போன சம்பவங்கள் இடம்பெற்றன. ஆக, நினைவுகூருவதில் என்ன தவறு உள்ளது? தேசிய மக்கள் சக்தியென்பது இனவாதக் கட்சி கிடையாது. எமது இதயங்களில் இனவாதம் இல்லை.

வடக்கு, கிழக்கில் பலவந்தமாக குடியேற்றங்களை ஏற்படுத்தியது யார்? யாழ். நூலகத்தை எரித்தது யார்? 1983 கலவரத்தை ஏற்படுத்தியது யார்? இந்த வன்முறைகளை யார் செய்தனரோ அவர்களுக்குச் சில கட்சிகள் இன்று சோரம் போயுள்ளன. இது கவலையளிக்கின்றது. வடக்குக்கும், தெற்குக்கும் ஒரே சட்டம், ஒரே சலுகைதான் இருக்கவேண்டும் - என்றார். (அ-ம-44)

## பயங்கரவாதத்...

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவுள்ளது என்றும், அதற்குப் பதிலாக உருவாக்கப்படும் புதிய சட்டம் தொடர்பில் பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களை முன்வைக்கலாம் என்றும் அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் விவாதிப்பதற்காக யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் நேற்று ஒன்றுகூடிக் கலந்துரையாடி இரண்டு தீர்மானங்களை எடுத்துள்ளது. இதன்படி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும் என்றும், அரசாங்கம் குறிப்பிடுவதைப்போன்று மாற்றுச் சட்டங்கள் அல்லது புதிய சட்டங்கள் அவசியம் இல்லை என்றும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டத்தை உருவாக்காமல், தற்போது காணப்படும் குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைக்குக் கீழான ஏற்பாடுகளின் அடிப்படையில் இந்த விடயங்களை அணுகலாம் என்றும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெல்லியைத் தோற்கடித்து பிளேஓவ் சுற்றில் மும்பை!

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற தீர்க்கமான ஆட்டத்தில் டெல்லியைத் தோற்கடித்து பிளேஓவ் சுற்றை உறுதிப்படுத்தியது மும்பை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சூரியகுமார் யாதவ் 73 ஓட்டங்களைப் பெற்றார். இறுதி இரு ஓவர்;களில் மும்பை அணி 48 ஓட்டங்களைக் குவித்தமையே அந்த அணி கௌரவமான ஓட்டங்களைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. பதிலுக்குக்களமிறங்கிய டெல்லி அணிக்கு ஆரம்பம்முதல் சறுக்கலே மிச்சமானது. வெறும் 121 ஓட்டங்களில் டெல்லி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. டெல்லி சார்பில் ரிஷ்வி பெற்ற 39 ஓட்டங்களே அதிகபட்சமாகும்.

சான்நெர் 4 ஓவர்கள் வீசி வெறும் 11 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பும்ராவும் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (ம)

# குஜராத், பஞ்சாப், பெங்களூர், மும்பை பிளேஓவ் சுற்றுக்குத் தகுதிபெற்றன

ஐ.பி.எல். தொடரில் பிளேஓவ் சுற்றுக்குச் செல்லும் அணிகளின் விவரங்கள் இறுதியாகியுள்ளன. இதன்படி, குஜராத், பஞ்சாப், பெங்களூர், மும்பை அணிகள் பிளேஓவ் சுற்றுக்குள் நுழைந்துள்ளன. மே மாதம் 29ஆம் திகதி பிளேஓவ் சுற்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அகதிகளுக்கு இடங்கொடுக்க தர்மசத்திரம் இல்லை இந்தியா

## இலங்கைத் தமிழர் மனு மீதான விசாரணையில் இந்திய உயர்நீதிமன்றம் காட்டமான கருத்து

கொழும்பு, மே 22

140 கோடி மக்கள் தொகையுடன் ஏற்கனவே இந்தியா போராடிவரும் நிலையில், உலகம் முழுவதும் உள்ள அகதிகளுக்கு இடமளிக்க இந்தியா தர்மசாலை இல்லை என்று இந்திய உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இலங்கைத் தமிழர் ஒருவர் தாக்கல்செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் இவ்வாறு கூறி மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகள் குழுவுடன் தொடர்புகொண்டிருந்ததாக இலங்கைத் தமிழரான மனுதாரர் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். தனிநபர் அல்லது அமைப்புகளின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்தும் சட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டுவிசா ரணையில் நீதிமன்றத்தால் அந்த நபர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார். சென்னை உயர் நீதிமன்றம் அவரது சிறைத்தண்டனையை 10 ஆண்டுகளில் இருந்து ஏழு ஆண்டுகளாகக் குறைத்தது. அவரது சிறைத் தண்டனை முடிந்தவுடன் நாட்டைவிட்டு வெளியேறும்படி கேட்டுக்கொண்டது. மூன்று வருடங்களாக அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த நபர் இலங்கைக்குத் திரும்பினால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும், தன்னை இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதைத் தடுத்துநிறுத்தக் கோரியும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். முறையான நுழைவிசைவில் (விசா) இந்தியா வந்ததாகவும் தனது மனைவி மற்றும் குழந்தைகள் இப்போது இந்தியாவில் 'குடியேறிவிட்டனர்' என்றும் தனது மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீபங் கர்தத்தா மற்றும் நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "உலகம் முழுவதிலும் இருந்துவரும் அகதிகளை இந்தியா வரவேற்கவேண்டுமா? நாங்கள் 140 கோடியுடன் போராடுகிறோம். இது எல்லா இடங்களிலிருந்தும் வரும் வெளிநாட்டினரை மகிழ்விக்கக்கூடிய தர்மசாலை அல்ல. இங்கே குடியேற உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இலங்கையில் உங்களது உயிருக்கு ஆபத்து இருந்தால் வேறு நாட்டுக்குச் செல்லுங்கள்" என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (எ-இ)

# பொலிஸ் தடுப்பில் 49 பேர் உயிரிழப்பு

இலங்கையில் 49 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் உயிரிழந்துள்ளனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 பேர் 2020 - 2025 காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர். சட்டத்தை இறுக்கமாக நடை முறைப்படுத்த வேண்டும் என்றும் தடுப்புக்காவலில் உள்ள கைதிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-6)

# தங்கமுலாமிட்ட துப்பாக்கிகளுடன் பெண்கள் கைது

கொழும்பு, மே 22

கொழும்பு, ஹெவ்லொக் அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து கைப்பற்றப்பட்ட ரி-56 ரகத் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் வெள்ளவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளின்போது, அந்தத் துப்பாக்கி தங்கமுலாம் பூசப்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது. (ச-இ)


நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
29 . 11 . 1946

விண்ணில்
04 . 06 . 2021



அப்பா என்றும் உங்கள் நினைவில்...

அமரர் சிதம்பரன் திருஞானசிவம்

(உரிமையாளர் - சிதம்பரன் களஞ்சியம், கைதடிச்சந்தி, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)

"எங்களை உயிருக்கு மேலாக நேசித்த
அப்பா.. எங்களை விட்டு சொல்லாமல்
சென்றதேனோ.....
நாங்கள் வரும் வரை காத்திருந்து
ஒன்றாய் சாப்பிடும் அப்பா
இனி எப்போது எங்களோடு ஒன்றாய்
சாப்பிட வருவீர்கள்..... "

இன்று (22.05.2024) வியாழக்கிழமை கைதடியில் அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"திருத்தணிகை"
கைதடி மத்தி,
கைதடி

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 58299) E-1



A/L வரலாறு

ஆசிரியர்: M.பத்மன் (B.A (Hons) History, MA (History M.E.D)

பாராட்டி வாழ்த்துகின்றேன்




செல்வி பாலகுமார் கௌசிகா

A/L - 2024

மாவட்ட நிலை - 02

மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்று ஆனால் வரலாறு பாடம் எடுத்தவர்களில் முதல் நிலை மாணவியாகத் திகழும் இவரை வாழ்த்துவதோடு ஏனைய உயர் பெறுபேறு பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான எனது அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

வழமைபோன்று இம்முறையும் எனது மாணவர்களே அதிக "A" தர சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஆசிரியர் கற்பிக்கும் இடங்கள்

D.M.I ஆரியகுளம், யாழ்ப்பாணம். | உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி, கொக்குவில் | BITSMANS மானிப்பாய்

தொடர்புகளுக்கு:- 077 482 5587

(CS/58325) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.